MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :6 /Issue 6 / January 2026 E-ISSN 3049-3676 (Online)

மேன்மதி கோவை தமிழ் மன்றம்
சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்

MENMATHI KOVAI TAMIL MANDRAM

INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS

# நாட்டுப்புற இலக்கியங்களில் வேளாண்மை கூறுகள்

**ஆய்வாளர்**

**வெ.நிவேதா**

**தமிழ் இலக்கியம்- முதுகலை இரண்டாம் ஆண்டு,**

**சக்தி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி,**

**ஒட்டன்சத்திரம், திண்டுக்கல் மாவட்டம்.**

**நெறியாளர்**

**முனைவர்.க.மலர்விழி**

உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,

சக்தி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி,

ஒட்டன்சத்திரம், திண்டுக்கல் மாவட்டம்.

Cell No-9047925710

JANUARY - FEBRUARY

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :6 /Issue 6 / January 2026 E-ISSN 3049-3676 (Online)

# Agricultural Elements in Folk Literature

**V.Nivetha,**
**Second Year, M.A. Tamil Literature,**
**Sakthi College Of Atrs and Science for Women,**
**Oddanchathram, Dindigul District.**

**Guide Name**
**Dr. K. Malarvizhi,**
**Assistant Professor in Tamil,**
**Sakthi College Of Atrs and Science for Women,**
**Oddanchathram.**

## Abstract

Agriculture has been the fundamental livelihood of the Tamil society. From the time humans lived in harmony with nature until today, agricultural life has shaped their culture, thoughts, and traditions. These life experiences have taken the form of folk literature and have been passed down through generations. Agriculture serves as a central element in all folk songs, proverbs, customs, and festivals. This research paper aims to examine the agricultural elements found in folk literature.

## முன்னுரை

தமிழ்ச் சமூகத்தின் அடிப்படை வாழ்வாதாரம் வேளாண்மையாக இருந்து வந்தது. மனிதன் இயற்கையுடன் இணைந்து வாழ்ந்த காலம் முதல் இன்று வரை வேளாண்மை வாழ்க்கை அவனது பண்பாட்டையும்,

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :6 /Issue 6 / January 2026 E-ISSN 3049-3676 (Online)

சிந்தனையையும், கலாச்சாரத்தையும் உருவாக்கியுள்ளது. அந்த வாழ்வியல் அனுபவங்களே நாட்டுப்புற இலக்கியங்களாக உருவெடுத்து, தலைமுறைகள் கடந்து பரவியுள்ளன. நாட்டுப்புறப் பாடல்கள், பழமொழிகள், பழக்கவழக்கங்கள், விழாக்கள் ஆகிய அனைத்திலும் வேளாண்மை ஒரு மையக் கூறாக விளங்குகிறது. இவ் ஆய்வு கட்டுரை, நாட்டுப்புற இலக்கியங்களில் இடம்பெறும் வேளாண்மை கூறுகளை ஆராய்வதே நோக்கமாகக் கொண்டுள்ளது.

## திறவுச் சொற்கள்

வேளாண்மை - சமூக வாழ்வின் அடித்தளம், நாட்டுப்புறப் பாடல்களில் வேளாண்மை, நாட்டுப்புற பழமொழிகளில் வேளாண்மை, மழை வேண்டல் ஆகியவை ஆகும்.

## நாட்டுப்புற இலக்கியம் – ஒரு விளக்கம்

நாட்டுப்புற இலக்கியம் என்பது எழுத்து வடிவமின்றி, வாய்மொழியாக மக்கள் மத்தியில் பரவி வந்த இலக்கியமாகும். இது கல்வியறிவு இல்லாத மக்களின் வாழ்வியல் அனுபவங்களையும் உணர்வுகளையும் வெளிப்படுத்துகிறது. விவசாயிகள், கூலித் தொழிலாளர்கள், பெண்கள், முதியவர்கள் ஆகியோரின் வாழ்வோடு பின்னிப்பிணைந்த இலக்கியமாக நாட்டுப்புற இலக்கியம் விளங்குகிறது.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :6 /Issue 6 / January 2026 E-ISSN 3049-3676 (Online)

## வேளாண்மை – சமூக வாழ்வின் அடித்தளம்

தமிழ் சமூகம் வேளாண்மைச் சமூகமாக நீண்ட காலம் இயங்கியுள்ளது. உணவு உற்பத்தி, பொருளாதாரம், குடும்ப அமைப்பு, விழாக்கள், நம்பிக்கைகள் அனைத்திற்கும் அடிப்படையாக வேளாண்மை அமைந்துள்ளது.

## நாட்டுப்புறப் பாடல்களில் வேளாண்மை
## உழவுப் பாடல்கள்

உழவு செய்யும் போது உழைப்பின் சோர்வை மறக்க பாடப்படும் பாடல்களே உழவுப் பாடல்கள்.

**"ஏரிக்கட்டு நிலம் உழுது**
**நெல்லு நாற்று நட்டாச்சு**
**வானம் தந்த மழையால**
**வயலும் பச்சை ஆனாச்சு"**

( **தமிழ் நாட்டுப்புறப் பாடல்கள்**, **பக் .110** )

இப்பாடல் நிலம், உழவு, மழை, பயிர் வளர்ச்சி ஆகிய வேளாண்மை கூறுகளை வெளிப்படுத்துகிறது.

## நாற்று நடும் பாடல்கள்

பெண்கள் கூட்டு உழைப்பில் பாடும் பாடல்களில் வேளாண்மை வாழ்க்கை பிரதிபலிக்கிறது.

**"நாற்று நட்ட கைகளுக்கு**
**நல்ல விளைச்சல் கிடைக்கணும்**
**நாட்டார் எல்லாம் சோறு தின்ன**
**நெல் விளைஞ்சு பெருகணும்"**

(**நாட்டுப்புற வேளாண்மை பாடல்கள்,** பக் .85 )

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :6 /Issue 6 / January 2026 E-ISSN 3049-3676 (Online)

உழைப்புக்கும் உணவுக்கும் உள்ள தொடர்பை இது காட்டுகிறது.

## அறுவடைப் பாடல்கள்

அறுவடை என்பது விவசாயியின் உழைப்பின் பலன். மகிழ்ச்சி, திருப்தி, நன்றி உணர்வு ஆகியவை இதில் வெளிப்படுகின்றன.

**“கதிர் கதிரா நெல் விளைஞ்சு**
**களஞ்சியமும் நிறைஞ்சாச்சு**
**உழுத கைக்கு பலன் கிடைச்சு**
**உழவர் மனம் குளிர்ந்தாச்சு”**

(**தமிழ் கிராமியப் பாடல்கள்,** பக் .120)

வேளாண்மை வாழ்க்கையின் நிறைவு நிலை இதில் தெரிகிறது.

## நாட்டுப்புற பழமொழிகளில் வேளாண்மை

நாட்டுப்புற பழமொழிகள் விவசாய அறிவின் களஞ்சியமாக உள்ளன.

**“மழை பெய்தால் மண் வளம் பெறும்”**
**“உழவன் உறங்கினால் ஊர் பசிக்கும்”**
**“நல்ல விதை நல்ல விளைச்சல்”**

இவை விவசாயத்தின் அடிப்படை உண்மைகளை எளிமையாகச் சொல்லுகின்றன.

### உழுவதற்கு முன் நிலத்தை பேணுதல்

உழவர்களுக்கு நிலமும் நீரும் வாழ்வின் முதலீடுகளாகும். நிலத்தைத் தன் உயிரினும் மேலாகக் கருதினர். வயலை நாள்தோறும் பேணிக் காக்க தவறினால் ஏற்பட்ட இடர்பாட்டை வள்ளுவர் கூறுகையில்,

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :6 /Issue 6 / January 2026 E-ISSN 3049-3676 (Online)

**"செல்லான் கிழவ னிருப்புனிலம் புலன்ந்**
**தில்லாளி னூடி விடும்"** (குறள்: 1039)

என்று படம்பிடித்துக் காட்டுகிறார். "நாட்டையாளுகின்ற மன்னனும் நிலத்தைப் போற்றும் உழவனைப் பேணிப்பாதுகாக்க வேண்டும் என்ற குறிப்பும் மறைமுகமாக உணர்த்தப்படுவதை இலக்கியங்கள் வாயிலாக அறியலாம். இக்கருத்தை அரண் செய்யும்வகையில் மண்ணின் மகத்துவத்தை,

**"காணி அலங்கார மாம்**
**காணி காலு சிங்காரமாம்**
**காணி சுத்தி இருக்கும்**
**வரப்புகளும் ஒய்யாரமாம்"**

(**தமிழ்நாடு நாட்டுப்புறவியல் துறை, பக் .40**)

என்று குளித்தலை வட்டார வழக்குப் பாடல்கள் புலப்படுகின்றன.

## மாட்டின் நலம் காக்க வேண்டுதல்

நாட்டுப்புற மக்கள் உழவுத் தொழில் தொடங்குவதற்கு முன் தங்களின் வாழ்விற்காகத் தன்னையே அர்ப்பணிக்கும் மாடுகளின் நலத்திற்கு இறைஞ்சுகின்ற வழக்கம் காணப்படுகிறது. தங்களோடு சேர்ந்து வாழ்ந்து மரணமடையும் மாடுகளைத் தங்களின் உறவாகக் கருதி அவற்றிற்கு உழவுத்தொழில் நடைபெறும் போது துன்பம் வந்திடாதிருக்க இறைவனிடம் வேண்டுகின்றனர்.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :6 /Issue 6 / January 2026 E-ISSN 3049-3676 (Online)

"**காக்கை குருவிகள் எங்கள் சாதி**" என்று இந்நூற்றாண்டில் எண்ணுவதற்கு முன்பே நாட்டுமக்கள் மாடுகளைத் தமது உறவாகக் கொண்டு பழகியமைகாணப்படுகிறது.

**"பூட்டின மாட்டுக்கு**
**பிழைமேலும் வாராமல்**
**கட்டின மாட்டுக்குக்**
**கலகம் வந்து சேராமல்**
**காரும் கணபதியே"**

(**உழவுத் தொழில் சார்ந்த வழிபாட்டு பாடல்கள்,பக் .**55)

எனும் வேண்டலிலிருந்து அறிய முடிகின்றது.

## மழை வேண்டல்

உழவர்கள் பயிர்வளர, விளைச்சல் பெருக மழையைப் பெரிதும் எதிர்நோக்குவர், நீரின்றிப்போனால் மனிதனுக்கு வாழ்வின்றிப் போகும். நாட்டில் வளம் குன்றிப் போகும். இந்த ஏக்கத்தை வெளிப்படுத்தும் வகையில்,

**"இருபதியா லெட்டால் இன்னைக்கு**
**இருட்டாதோ மானம்**
**இருட்டாதோ மானம் – அந்த**
**பிரட்டாசி மாசம்**
**பிரட்டாசி மாசம் – அங்கே**
**பேயாதோ மானம்**
**பேயாதோ மானம் – இன்னிக்கு**
**பெருகாதோ ஏரி"**

(**மழை வேண்டல் நாட்டுப்புறப் பாடல்கள், பக்.** 30)

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :6 /Issue 6 / January 2026 E-ISSN 3049-3676 (Online)

என்ற புரட்டாசி மாதத்தில், மழையை எதிர்பார்த்துத் தன் ஆதங்கத்தை வெளிப்படுத்துகின்றனர்.

**மழை சோறு உண்ணல்**

வேளாண் தொழிலுக்கு அடிப்படையாக விளங்குவது மழை. மழையைக் குறித்துப் பலவிதமான நம்பிக்கைகள் காணப்பெறுகின்றன. கிராம மக்களிடம் மழை பொழிய மழைச் சோறு உண்ணும் பழக்கம் காணப்படுகிறது. பருவமழை பெய்யாது பொய்த்து விட்டால் வருண பகவானிடம் வேண்டுதலும் வழிபாடும் நடத்துவர்.

மழை பொய்த்த காலத்தில் பெண்கள் வீடுவீடாகச் சென்று அரிசி, கம்பு, சோளம், கேழ்வரகு முதலியவற்றைப் பெற்று ஒன்றாகச் சேர்ததுச் சமைத்து உப்பிடாது உண்பர். இதனை மழைச்சோறு என்றும் குறிப்பிடுவர். எல்லோரும் உண்டபின் பெண்கள் தங்கள் குழந்தைகளுடன் பரதேசம் போவதாகப் பாவனை செய்வர். வயது முதிர்ந்த பெண்கள் மாரடித்துக் கொண்டு இடுகாட்டை நோக்கிப் பாடிக் கொண்டு செல்வர். இவ்வாறு செய்தால் மழை பொழியும் என்னும் நம்பிக்கை அக்கால மக்களிடம் இருந்தது என்பதை நினைவூட்டும் வகையில்,

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :6 /Issue 6 / January 2026 E-ISSN 3049-3676 (Online)

**“வருண பகவானே**
**உரிய மழை பெய்யவேணும்**
**மழை பெய்யலையே**
**மானமே போகுதடி**
**என்சோட்டு பெண்டுகளே**
**விரதங்கொள வாருங்கடி**
**மழைச்சோறு ஆக்கி**
**மனசாரக் குடிச்ச பின்னே**
**இடுகாட்டை பார்த்து**
**மாரடிச்சுப் போவோமடி**
**மனமிரங்கி மழைமேகம்**
**மழை பெய்ய வேணுமடி”**

**(தமிழ் நாட்டுப்புற நம்பிக்கைகள், பக் .95)**

என்று பெரம்பலூர் வட்டப் பாடல் அமைந்துள்ளது.

## உழும்போது

### ஏற்றம்

உழுதொழிலின் தொடக்கமாக ஏற்றம் இறைத்தல் காணப்படுகிறது. ஏற்றம் இறைத்தலின்மூன்று வகைகளை வழக்கத்தில் கொண்டுள்ளனர். (1) கவலை ஏற்றம் (2) ஆளேறும் ஏற்றம் (3) பரி ஏற்றம். ஏற்றம் இறைக்கும் போது பாடல் பாடும் பழக்கமும் இருந்தது என்பதை,

**“ஏழை எல்லாம் கூடி**
**ஏத்திறைப்போம் வாங்க**
**பஞ்சை எல்லாம் கூடி**
**பரி இறைப்போம் வாங்க”**

**(நீர்பாசன நாட்டுப்புறப் பாடல்கள், பக் .60)**

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :6 /Issue 6 / January 2026 E-ISSN 3049-3676 (Online)

என்று பரியேற்றப்பாடல் துறையூர் வட்டத்தில் காண முடிகின்றது.

**மழைக்குரிய பயிரிடுதல்**

கிராமங்களில் வானம் வழங்கும் நீரின் அளவிற்கேற்பப் பயிரிடும் வழக்கம் இருந்துவருகிறது. மழையின் அளவைப் பொறுத்து அதற்குரிய பயிர் விளையச் செய்கின்றனர்.நாள்தோறும் மழை பொழிந்தால் நெல் லைப் பயிரிடுவர். விட்டுவிட்டு மழைப் பொழிந்தால்சோளத்தை பயிர் செ ய்வர். கம்பி போன்று மழை பொழிந்தால் கம்பு பயிரிடுவர்.

**“நித்தம் மழை பேஞ்சா**
**நம்ம நெல்லு பயிரேறும்**
**சோனை மழை பேஞ்சா**
**நம்ம சோளம் பயிரேறும்**
**கம்பி மழை பேஞ்சா**
**அங்கே கம்பு பயிரேறும்”**

(**வானிலை சார்ந்த நாட்டுப்புற அறிவு,பக் .70**)

என்று முசிறிவட்ட வழக்கு பாடல்கள் சித்திரிக்கின்றன.

## குலவைப்பாட்டு

வயலில் இறங்கி வேலை செய்யும் போதும், நாற்று நடும்போதும், அ றுவடையின் போதும்குலவைப்பாடல் பாடுவது வழக்கம். குலவ ஒலி பெ ண்கள் உதடுகளைக் குவித்து நாவினார்உரசி ஒருவகை ஒலியைக் குரலி ல் கொடுப்பர். இவ்வொலி கேட்பதற்கு மிகவும்இனிமையாக இருக்கும்.

**“எஞ்சோட்டுப் பெண்டுகளா**
**எடுத்துக் குலவ போடுங்கடி”**

(**பெண்கள் பாடும் நாட்டுப்புறப் பாடல்கள், பக் .45**)

என்று இரண்டு வரிகள் பாடியதும் மற்ற பெண்கள் குலவை இடுவர்.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :6 /Issue 6 / January 2026 E-ISSN 3049-3676 (Online)

## உழத்தியர்களை உபசரித்தல்

வித்துக்கள் நாற்றுகளாய் வளர்ந்த நிலையில் நாற்றுகளைப் பறித்து வரிசைப்படுத்தி நடுவர். இப்பணிக்காகப் பெண்கள் மட்டுமே வருவர். நாற்று நடலின் முதல்நாள் அனைவருக்கும் உணவளிப்பர், பூவும், குங்குமமும் கொடுப்பார்கள். நடவுப்பணி மகிழ்வுடனும் செம்மையாகவும் நடைபெற இவ்வாறு உபசரிக்கும் வழக்கம் இன்றும் இருந்து வருகிறது.

**"ஏலேலம்மா ஏலம்**
**ஏலோலங்கிடி ஏலம்**
**ஓல்த்தூ பண்ணை**
**எங்க நல்ல பண்ணை**
**நாத்து நட போவேருக்கு**
**சோறு போடும் பண்ணை**
**பூவும் பொட்டும் பணமும்**
**அள்ளிதரும் பண்ணை"**

(**நடவு பணிசார் நாட்டுப்புறப் பாடல்கள்,பக்.20**)

`

உழத்தியரை உபசரிப்பதோடு பண்ணையாரையும் பாராட்டுகின்ற பண்பு கிராம மக்களிடம் இருந்தது என்பதும் புலனாகிறது.

## விலங்கினம் கொண்டு தாள் அடித்தல்

அறுவடை செய்தலின் போரடிப்பர். போரடிப்பதற்கு மாடும், யானையும், பயன்படுத்தப் பட்ட வழக்கம் பழங்காலத்திலேயே இருந்துள்ளது. இவ்வழக்கம் இன்றும் கிராம மக்களிடம் காணப்படுகிறது.

MENMATHI KOVAI TAMIL MANDRAM   INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :6 /Issue 6 / January 2026    E-ISSN 3049-3676 (Online)

**“மாடு கட்டி தாளடிக்க**
**மவராசன் பண்ணையிலே**
**கண்ணு கட்டி தாளடிக்க**
**காராழன் பண்ணையிலே**
**ஆனைகட்டி தாளடிக்க**
**ஆறுமாசம் செல்லும்**
**மாடுகட்டி தாளடிக்க**
**மறுவருசம் செல்லும்**
**குதிரை கட்டி தாளடிக்க**
**கோடிநாள் செல்லும்”**

(**தமிழ் நாட்டுப்புறப் பாடல்கள்**, **பக்.** 110)

என்று நாட்டின் வளத்தை அறியும் முகமாக விலங்கினங்களைப் போரடிக்க பயன்படுத்தி வந்தமையை அறியலாம்.

## உழவு நிறைவுற்றபின்

கிராம மக்கள் கதிரவனின் கதிர் நிலத்தில் விழும் முன் கழனிக்கு வந்து அந்திவரை அயராது உழைக்கும் பண்பாளர்கள். உழைப்பிற்கேற்ற ஊதியத்தை உடன்பெற விரும்புபவர்கள். வாங்கும் பணத்தைக் கொண்டு வயிற்றை நிரப்பும் வாழ்க்கையினர். இதனை,

**“முதலாளி வந்தவுடன்**
**முதல் பணத்தை**
**பெத்துக்குவோம்**
**சீக்கிரமாய் நட்டுவாடி**
**சின்னபுள்ளே சிங்காரி”**

(**கூலி தொழிலாளர் நாட்டுப்புறப் பாடல்கள்**, **பக்.** 95)

எனும் பாடலில் கிராம மக்களின் உழைப்பின் உயர்வும், ஊதியத்தை விரைவில் பெறவிரும்பும் எண்ணமும் புலப்படுகின்றன.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :6 /Issue 6 / January 2026 E-ISSN 3049-3676 (Online)

ஆகவே வேளாண்மைத் தொழில் நாட்டுப்புற மக்களின் உயிர்த்தொழிலாக விளங்குகிறது. உழுதொழில் தொடங்கும் முன் வயலைப் போற்றுவதும், ஏரில் பூட்டப்பட்ட மாட்டிற்கு தீங்குவராது இறைவனை வேண்டுதலும், புரட்டாசி மாதத்தில் மழை பொழியும் என்ற நம்பிக்கையும், மழை பொய்த்தபோது மழைச்சோறு உண்கின்ற பழக்கமும் காணப்படுகின்றன. உழவுத்தொழில் புரிகிறபோது வயலுக்கு ஏற்றம் இரைத்து நீர் பாய்ச்சுவதில் கவலை ஏற்றம், ஆளேறும் ஏற்றம், பரிஏற்றம் என மூன்று வகைப்பட்ட ஏற்றங்கள் காணப்பட்டமையும் அறிய முடிகின்றன. நாற்று நடும் போதும் அறுவடையின் போதும், போரடிக்கும் போதும் குலவை ஒலிஒலிக்கின்ற பழக்கம் காணப்படுகின்றனது. நாற்று நடுகின்ற நாளன்று உழத்தியர்களை உபசரிக்கும் வழக்கமும், பண்ணையாரைப் பாராட்டும் பண்புள்ளமும், போராடிப்பதற்கு யானை, மாடு, குதிரை போன்ற விலங்கினங்கள் பயன்படுத்தும் வழக்கமும் அக்காலத்தில் இருந்து வந்துள்ளமையை நாட்டு புறப்பாடல்கள் வழி அறியலாம்.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :6 /Issue 6 / January 2026 E-ISSN 3049-3676 (Online)

## முடிவுரை

நாட்டுப்புற இலக்கியங்களில் வேளாண்மை கூறுகள், தமிழ்ச் சமூகத்தின் வாழ்வியல் வரலாற்றை உணர்த்தும் உயிர்ப்பான சாட்சிகளாக விளங்குகின்றன. வேளாண்மை என்பது ஒரு தொழில் மட்டுமல்ல; அது பண்பாடு, வாழ்க்கை நெறி, சமூக ஒற்றுமை ஆகியவற்றின் அடித்தளம் என்பதை இவ்விலக்கியங்கள் வெளிப்படுத்துகின்றன. நாட்டுப்புற இலக்கியங்களைப் பாதுகாப்பது, வேளாண்மை பண்பாட்டைப் பாதுகாப்பதற்குச் சமமானதாகும்.

## துணைநூல் பட்டியல்

1. டாக்டர் சு. சக்திவேல்,தமிழ் நாட்டுப்புறப் பாடல்கள், தமிழ்நாடு அரசு வெளியீடு, சென்னை.
2. பேராசிரியர் நா.வானமாமலை, நாட்டுப்புற வேளாண்மை பாடல்கள், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.
3. புலவர் கு.சுப்பிரமணியன், தமிழ் கிராமியப் பாடல்கள்.
4. டாக்டர் ஆறு. ராமநாதன்,தமிழ் நாட்டுப்புறப் பழமொழிகள்.
5. திருக்குறள், பரிமேலழகர் உரை.
6. வட்டார நாட்டுப்புறப் பாடல்கள், தமிழ்நாடு நாட்டுப்புறவியல் துறை.
7. முனைவர் ப. மணிகண்டன்,நாட்டுப்புறப் பாடல்கள்.
8. தமிழ் நாட்டுப்புற நம்பிக்கைகள்,உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.
9. முனைவர் ச.முருகேசன், வானிலை சார்ந்த நாட்டுப்புற அறிவு.
10. டாக்டர் சு.சக்திவேல்,தமிழ் வேளாண் வாழ்க்கை பாடல்கள்.